**கிளிநொச்சி மாவட்டத்தின் பத்து கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்கம் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** கிளிநொச்சி மாவட்டத்தின் கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்கள் 10 இன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2023 ஆண்டிற்கான கிளிநொச்சி மாவட்டத்தின் 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பயியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் காணிகட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக் காமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கட்டடத்தின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும். காணியின் பெறுமதி மதிப்பீடு கிடைக்கப்பெற்றவுடன் சீராக்கம் செய்யப்படும். | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அக்கராயன்குளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் பதிவேடுகளின்படி நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி மீதி ரூபா 10,180,332 ஆக காணப்பட்டிருந்தும் நிதிநிலமைக் கூற்றில் அவை ரூபா 10,731,900 ஆக ரூபா 551,568 தொகையினால் மிகைப்படுத்தி காட்டப்பட்டிருந்தது. | இவ்வாறான தவறுகள் எனிவரும் காலங்களில் இடம்பெறுவது ஏற்படாதவாறு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 04 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 ல் காணப்பட்டிருந்த ஏக்கர்வரி நிலுவை ரூபா 1,367,780 ஆனது நிதிக்கூற்றுக்களில் வருமதியாக காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சீர் செய்வதற்கு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினது 107 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் உழவு இயந்திரங்களிற்கு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உழவு இயந்திரங்களின் உரிமை மாற்றம் செய்யப்பட்ட பின்னர் பெறுமானத்தேய்வு சீர்செய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பரந்தன் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவின் மீளாய்வாண்டில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 45.16 மெட்ரிக் தொன் மானிய உர இருப்பின் பெறுமதி ரூபா 7,873,849 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இருப்பு கணக்கில் இருப்பாக காட்டப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும். | - மேற்படி - |

**1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் மீளாய்வாண்டிற்கான நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த வருமதி மற்றும் சென்மதி மீதிகளான கூட்டுமொத்தம் ரூபா 13,738,372 இனை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | வருமதி சென்மதி சீராக்கல் குழு நியமிக்கப்பட்டு குழுவின் பரிந்துரைக்கமைய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டம்** | | | |
| (i) பிரிவு 44 (1) | கமக்காரர் அமைப்புக்கள் ஒவ்வொன்றினதும் கணக்குகள் கமநல ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியால் பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் 10 கமநல சேவை நிறைக்குழுக்களின் கணக்குகள் பரிசீலனை செய்யப் பட்டிருக்கவில்லை. | கமக்கார அமைப்புக்களின் கணக்குகள் பரிசீலனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) பிரிவு 52 | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் கமநல அபிவிருத்தி பிரதேசத்திற்காக விவசாயத்திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | தனித்தனியாக விவசாயத்திட்டம் தயாரிக்கப்படும். | - மேற்படி - |
| (iii) பிரிவு 53 | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் கமத்தொழிற் காணிகளின் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவேடுகள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iv) பிரிவு 55 | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் நிர்வாகப் பிரதேசத்திலுள்ள கமத்தொழிற் காணிகளை நில அளவை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நில அளவை செய்யும் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | - மேற்படி - |
| | (v) பிரிவு 56(i) | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் ஏக்கர்வரிப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரிப் பதிவேடானது இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| **(ஆ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி : 502(2) | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் அவை பௌதீக ரீதியில் செவ்வை பார்க்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி ஒழுங்கு விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(இ)** | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி -II, பந்தி 9.1 | 02 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் காசு, காசோலை மற்றும் களஞ்சியங்கள் தொடர்புடைய உத்தியோத்தர்களிடமிருந்து பிணையங்கள் கடந்த 04 ஆண்டுகளாக பெறப்பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 10 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 9,056,225 தொகை மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 21,721,359 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளின் ரூபா 12,665,134 இற்கான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| உருத்திரபுரம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவில் 2019 செப்ரெம்பர் 28 ஆம் திகதியிலிருந்து ரூபா 301,350 பெறுமதியான எண்ணிக்கையான காலாவதியான சங்ஸ்தா திரவப்பசளை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான இருப்புக்களை பதிவழிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | காலாவதியான திரவப்பசளை குறித்து முறையான விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிகழ்ச்சி திட்டத்தின்மூலம் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட 76 உழவியந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் 13 வருடங்களாக வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | திருத்தம் செய்யக்கூடிய உழவு இயந்திரங்களை திருத்தம் செய்யவும் பாவனை அற்ற உழவு இயந்திரங்களை ஏலவிற்பனை செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | சொத்துக்களை முறையாகப் பயன்படுத்த அல்லது அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்கிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றுநிருபத்திற்கு அமைவாக செயல்பட வேண்டும். |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை (2030 ஆம் ஆண்டில்) அடைந்து கொள்ளும் பொருட்டு கமநல சேவைகள் நிலையங்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்ந்து வரும் வருடங்களில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் விதிகளின்படி, பொருத்தமான குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு, வருடாந்த முன்னேற்றங்கள் அளக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**5. கமநல வங்கி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் 2021/2022 காலப்பகுதியில் 84 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,388,893 பெறுமதியான பயிர்ச்செய்கை கடன் மற்றும் அதன் வட்டி ரூபா 400,744 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மற்றும் வட்டியினை அறவிடுவதற்கு கமநல நியாயசபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும |